## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 71/2023

பெயர் – பால்பாண்டி (பி.வா.சா.1)

நாள் – 20.06.2025

**வாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க நன்றாக தெரியும் என்றால் சரிதான். நான் எந்த ஊரில் வேலை பார்க்கிறேன் என்றால் திருப்பூரில் தங்கி வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கின் விபரங்கள் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் விபரத்தை நான் சொல்லி தான் எனது வழக்கறிஞருக்கு தெரியுமா என்றால் நானும், எனது அப்பாவும் சொல்லி தெரியும்.

2) நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கை தாக்கல் செய்த லிங்கதுரை எனது ஊர்காரரர் என்றால் சரிதான். அந்த லிங்கதுரை இந்த நீதிமன்றத்தில் வா.சா.ஆ.3 ஆக அ.வ.எண்.78/1999 என்ற வழக்கின் நீதிமன்ற தீர்ப்பை தாக்கல் செய்துள்ளார், அதுபற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3) அந்த வழக்கின் வாதி இதே வழக்கின் வாதியானவர் என்றும், அதில் அவருக்கு சாதகமாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டு விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்ததடையுறுத்து பரிகாரம் பெறப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பட்டாவில் பாலகிருஷ்ணன் மகன் லிங்கதுரை என்று உள்ளது என்றால் சரிதான்.

4) அதன் சர்வே எண்.528/46 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமான பட்டா உள்ள இடத்தில் தான் நாங்கள் குடியிருக்கும் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில் நாங்கள் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 ஆன தீர்வை ரசீதுகளில் லிங்கதுரை பெயர் உள்ளது என்றால் சரிதான்.

5) நான் எனது தரப்பில் நீதிமன்றத்தில் எத்தனை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள ஆவணபட்டியலில் வழக்கறிஞர் அறிவிப்பு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன உள்ளது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6) பி.வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். இந்த ஆவணம் சான்றிட்ட நகல் இல்லை என்றால் சரிதான். இந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும்

7) பி.வா.சா.ஆ.2 ஆவணம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் அரசு அலுவலரின் கையெழுத்தும், Digital Signature இல்லை என்றால் சரிதான். இந்த ஆவணமும் நீதிமன்றத்தில் எவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

8) பி.வா.சா.ஆ.3 ஆவணம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த ஆவணமும் நீதிமன்றத்தில் எவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த மூன்று ஆவணங்களும் நீதிமன்றத்திற்குள் எனக்கு தெரியாமல் வந்ததால் இந்த ஆவணங்களுக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான்.

9) தபசில் சொத்தில் வாதியிடம் நான் வாடகைக்கு குடியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் வாதியிடம் நான் வாடகைக்கு குடியிருக்கிறேன் என்றும், வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சீத்தாலட்சுமி மகன் பாலகிருஷ்ணன் என்பவர் எனது உடன் பிறந்த சகோதரி சின்னபாண்டியின் கணவர் ஆவார்.

10) பாலகிருஷ்ணன் எனக்கு மாமா உறவுமுறை என்றால் சரிதான். தபசில் சொத்தில் நான் எப்போது குடிபெயர்ந்தேன் என்றால் 2021ம் ஆண்டு. மேற்படி தபசில் சொத்தை நான் கிரையம் வாங்கி குடிபெயர்ந்தேன் என்றால் சரிதான். எவ்வளவு மதிப்பில் கிரையம் வாங்கினேன் என்றால் ரூ.25,000/-க்கு கிரையம் வாங்கினேன்.

அந்த கிரையம் வாங்கிய விபரத்தை எனது எதிர் உரையிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

11) வாதி அ.வ.எண்.78/1999 பெறப்பட்ட தீர்ப்பை எதிர்த்து இதுவரை மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, எனது தகப்பனாருக்கு தான் தெரியும். அ.வ.எண்.78/1999 பெறப்பட்ட தீர்ப்பு இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் வாதியின் வீட்டில் வாடகைக்கு குடிபெயர்ந்தும், வாடகை கொடுத்தும், கடந்த ஆறு மாதத்திற்கு மேலாக வாடகை கொடுக்காமல் இருந்து வந்ததால், வாதி அது குறித்து ஒரு வழக்கு தாக்கல் செய்து வந்ததால், எனது சகோதரி, அவரது கணவர் பாலகிருஷ்ணன் ஆகியோர் இணைந்து சதி செய்து வாடகை தராமலும், வீட்டை காலி செய்யாமலும் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

12) கடந்த 2023 ஜனவரி மாதம் முதல் இன்று வரை வாதிக்கு வாடகை பணம் செலுத்தவில்லை என்றால் சரிதான். நான், எனது சகோதரி, அவரது கணவர் பாலகிருஷ்ணன் ஆகியோர் இணைந்து சொத்தை அபகரிக்கும் நோக்கத்திலும், வாடகை செலுத்தாமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. சட்டப்படி வாதிக்கு கொடுக்க வேண்டிய வாடகை பணத்தை நான் செலுத்த கடமைபட்டவர் என்றும், தபசில் சொத்தை காலி செய்து திரும்ப கொடுக்க நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.